புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat,
Near KFC Moolakulam,
Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 T/TN/2026/0316/6130/1505

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS

மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்

காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 263 | 29-03-2026 | ஞாயிறு | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி- புதுச்சேரி

Volume 01 | Issue: 263 | 29-03-2026 | Sunday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy-Puducherry

# திமுகவின் 164 வேட்பாளர்கள் அறிவிப்பு- முழு பட்டியல்

சென்னை: மார்ச். 29–

2026 சட்டப்பேரவைத் தேர்தலுக்கான திமுக வேட்பாளர் பட்டியலை முதல்வர் ஸ்டாலின் நேற்று (மார்ச் 28) வெளியிட்டார். அதில் அறிவிக்கப்பட்டுள்ள 164 வேட்பாளர்களின் விவரம்:

1 கன்னியாகுமரி– ரெ.மகேஷ் பி.ஏ.,பி.எல்., 2.நாகர்கோவில்–எஸ்.ஆஸ்டின் எம்.ஏ, 3.இராதாபுரம் – மு.அப்பாவு, 4.பாளையங்கோட்டை–மு.அப்துல் வஹாப் பி.காம். 5. திருநெல்வேலி–சு.சுப்பிரமணியன் பி.இ.எம்.பி.ஏ, 6. ஆலங்குளம்– முனைவர். பால் மனோஜ் பாண்டியன் எம்.ஏ. எம். எல்.,பி.எச்டி, 7.தென்காசி–டாக்டர் கலை கதிரவன், எம்.பி.பி.எஸ். 8. வாசுதேவநல்லூர் – ஈ.ராஜா பி.காம்., எம்.எல்., 9.கோவில்பட்டி–கா.கருணாநிதி, 10. ஓட்டபிடாரம்– பி.எம்.ராமஜெயம் பி.எஸ்.சி, 11. திருச்செந்தூர்–அனிதா ராதாகிருஷ்ணன், 12. தூத்துக்குடி– திருமதி கீதா ஜீவன் எம்.காம்., பி.எட்., 13.விளாத்திகுளம் –ஜி.வி.மார்கண்டேயன் பி.ஏ.பி.எல், 14.முதுகுளத்தூர்– ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் பி.எஸ்.சி. பி.எல்., 15. இராமநாதபுரம் –காதர்பாட்சா (எ) முத்துராமலிங்கம், 16. பரமக்குடி–கே.கே.கதிரவன் பி.ஏ.பி.எல்., 17.திருச்சுழி–தங்கம் தென்னரசு பி.இ , 18. அருப்புக்கோட்டை–கே.கே.எஸ்.எஸ். ஆர்.ராமச்சந்திரன், 19.சாத்தூர்– அ. கடற்கரை ராஜ், 20.ராஜபாளையம்–செள. தங்கப்பாண்டியன், 21. கம்பம்–நா. ராமகிருஷ்ணன் எம்.ஏ., 22. போடிநாயக்கனூர்– ஓ.பன்னீர்செல்வம் பி.ஏ., 23. ஆண்டிப்பட்டி– ஆ.மகராஜன், 24.திருமங்கலம்–சேடப்பட்டி மு.மணிமாறன், 25. திருப்பரங்குன்றம் –கிருத்திகா தங்கபாண்டி பி.இ., 26.மதுரை மேற்கு–ரகு பாலாஜி பி.ஏ.பி.எல்., 27.மத்திய மதுரை–முனைவர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் பி.டெக்., எம்.எஸ்., பி.எச்டி., 28. மதுரை வடக்கு– கோ.தளபதி, 29.சோழவந்தான்–ஆ.வெங்கடேசன் பி.ஏ., 30.மதுரை கிழக்கு–பி.மூர்த்தி பி.ஏ.,31. மானாமதுரை–ஆ.தமிழரசி ரவிக்குமார் பி.காம், 32. திருப்பத்தூர்–கே. ஆர்.பெரியகருப்பன் பி.காம்.,பி.எல், 33.ஆலங்குடி–சிவ வீ மெய்யநாதன் எம்.சி.ஏ., 34. திருமயம்–எஸ்.ரகுபதி பி.எஸ்.சி., பி.எல்., 35.புதுக்கோட்டை –டாக்டர் வை.முத்துராஜா எம்.பி.பி.எஸ்., 36.விராலிமலைகே. கே. செல்லபாண்டியன் எம்.காம்., பி.எல்., 37. பேராவூரணி –நா.அசோக்குமார், 38. பட்டுக்கோட்டை–கா. அண்ணாதுரை பி.எஸ்.சி.,பி.எல்., 39.ஒரத்தநாடு –ஆர்.வைத்திலிங்கம் பி.ஏ , 40 தஞ்சாவூர்–சண்.ராமநாதன் எம்.பி.ஏ., 41.. திருவையாறு –துரை.சந்திரசேகரன் பி.ஏ.எல்.எல்.பி., 42.கும்பகோணம்– சாக்கோட்டை கா.அன்பழகன், 43. திருவிடைமருதூர்–முனைவர்.கோவி. செழியன் எம்.ஏ.பி.எல். பி.எச்டி., 44.திருவாரூர்– பூண்டிகே.கலைவாணன், 45. மன்னார்குடி– முனைவர். டி.ஆர்.பி.ராஜா பி.எச்டி., 46. வேதாரண்யம்– மா.மீ.புகழேந்தி, 47.பூம்புகார்–நிவேதா முருகன் , 48. புவனகிரி–துரை கி.சரவணன் எம்.ஈ., 49.குறிஞ்சிப்பாடி – எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் பி.எஸ்.சி. பி.எல் , 50.நெய்வேலி ச – பா.ராஜேந்திரன் பிஎஸ்சி.,பிஇ., 51. திட்டக்குடி –சி.வி.கணேசன் எம்.ஏ.,பி.எட்., டி.காப்., 52.ஜெயங்கொண்டம்க.சொ.க.கண்ணன் எம்.காம்., 53.அரியலூர் திருமதி.லதா பாலு எம்.ஏ , 54.குன்னம் சா.சி.சிவசங்கர் பி.இ.எம்.பி.ஏ., 55.பெரம்பலூர்டாக்டர். எஸ்.டி. ஜெயலட்சுமி எம்.பி.பி.எஸ்.,டி.ஜி.ஓ , 56. முசிறிஎன். எஸ்.கருணைராஜா பி.டெக். எம்.பி.ஏ., 57.மண்ணச்சநல்லூர் சீ.கதிரவன் பி.இ.,58. லால்குடித.பாரிவள்ளல் பி.ஏ ,59. திருவெறும்பூர்முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி எம்.சி.ஏ., பி.எச்.டி., 60. திருச்சி கிழக்குமுனைவர் இனிகோ இருதயராஜ் எம்எஸ்.டபிள்யூ. பி.எச்டி, 61. திருச்சி மேற்குகே.என்.நேரு, 62.ஸ்ரீரங்கம்எஸ்.துரைராஜ் எம்.காம். எம்.பில்.,63.குளித்தலை சூரியனூர் அ.சந்திரன் எம்.ஏ.,64. கிருஷ்ணராயபுரம் சி.கே.ராஜா,65. கரூர் ஆசி.எம். தியாகராஜன், 66. அரவக்குறிச்சி–மொஞ்சனூர் ஆர்.இளங்கோ பி.இ., 67.



வேடசந்தூர்டி.சாமிநாதன் பி.காம்.,68. திண்டுக்கல்– ஐ.பி.செந்தில்குமார் எம்.ஏ.,பி.எல்.,69.நிலக்கோட்டை நாகஜோதி பி.காம்., 70.ஆத்தூர்இ. பெரியசாமி பி.ஏ.,பி.ஜி.எல்.,71.ஒட்டன்சத்திரம் அர.சக்கரபாணி,72.மடத்துக்குளம்இரா. ஜெயராமகிருஷ்ணன் பி.எஸ்.சி. ,73. உடுமலைப்பேட்டைமு.ஜெயகுமார் பி. எஸ்.சி., எம்.ஏ.,74.வால்பாறைஆ.சுதாகர் பி.காம்.,75.கிணத்துக்கடவுகே.வி.கே. எஸ்.சபரி கார்த்திகேயன் பி.ஏ. ,76. கோயமுத்தூர் தெற்குவி.செந்தில்பாலாஜி பி.காம்.,77. தொண்டாமுத்தூர் என். ஆர்.கார்த்திகேயன் பி.ஏ.,78.கோயமுத்தூர் வடக்கு செந்தமிழ்செல்வன் பி.டெக்.. 79.சூலூர் தளபதி முருகேசன் எம்.ஏ.., 80.பல்லடம்க. செல்வராஜ்... ,81.திருப்பூர் தெற்கு ந.தினேஷ்குமார் எம்.ஐ.பி., 82.அவினாசி டாக்டர். கோக மணி எம்.பி.பி.எஸ்., 83.மேட்டுப்பாளையம் கவிதா கல்யாணசுந்தரம் எம்.காம்., 84.குன்னூர் கே.எம்.ராஜூ பி.காம்., 85..கூடலூர்மு. திராவிடமணி எம்.ஏ.,பி.எல்., 86.கோபிச்செட்டிபாளையம்என். நல்லசிவம் டி.எம்.இ, 87.அந்தியூர்எம். சிவபாலன் பி.காம்., 88.பவானி கே.ஏ.சேகர் (எ) கே.ஏ.சந்திரசேகர் எம்.ஏ.. , 89.பெருந்துறைதோப்பு என்.டி.வெங்கடாசலம் பி.ஏ. 90. காங்கேயம்மு.பெ.சாமிநாதன் பி.ஏ ,

91.தாராபுரம்–டாக்டர். இந்திராணி எம்.பி.பி.எஸ்.,டி.சி.எச், 92.ஈரோடு மேற்கு – சு.முத்துசாமி எம்.ஏ.,93.குமாரபாளையம்–எஸ்.பாலு, 94.பரமத்திவேலூர்–கே.எஸ்.மூர்த்தி பி.எஸ்சி., 95 நாமக்கல்–ப.இராணி எம்.ஏ.எல்.எல்.பி., 96.சேந்தமங்கலம்–பி. பூமலர், 97.இராசிபுரம்–டாக்டர் மா.மதிவேந்தன் எம்பிபிஎஸ்.எம்.டி., 98. வீரபாண்டி–டாக்டர் ஆ.கா.தருண் எம்.பி.பி.எஸ்., எம்.எஸ்., எம்.பி.ஏ. , 99.சேலம் தெற்கு–எம்.லோகநாதன் பி.எஸ்.சி., 100.சேலம் வடக்கு–இரா. இராஜேந்திரன் பி.ஏ.பி.எல், 100.சேலம் –வடக்கு இரா.இராஜேந்திரன் பி.ஏ.பி.எல்., 101.சங்ககிரி–மு. மணிகண்டன், 102.எடப்பாடி –காசி, 103.மேட்டூர்–மிதுன் சக்ரவர்த்தி பி.இ., 104.ஏற்காடு–டி.எம்.ரேவதி மாதேஸ்வரன், 105.கெங்கவல்லி–கு.சின்னதுரை பி.இ , 106.சங்கராபுரம்–தா.உதயசூரியன் பி.எஸ்சி., 107. ரிஷிவந்தியம்–வசந்தம் கார்த்திகேயன் பி.எஸ்சி., 108. உளுந்தூர்பேட்டை – ஜி.ஆர். வசந்தவேல் பி.இ , 109. திருக்கோயிலூர்–டாக்டர் பொன். கௌதமசிகாமணி எம்பிபிஎஸ்., எம்.எஸ்., 110.விக்கிரவாண்டி–அன்னியூர் சிவா (எ) அ.சிவசண்முகம் பிஏ. , 111.விழுப்புரம் – டாக்டர் இரா.லட்சுமணன் எம்.பி.பி.எஸ்., டி.ஆர்த்தோ, 112.வானூர்–கௌதம் திராவிடமணி பி.இ , 113. செஞ்சி கே.எஸ்.மஸ்தான் , 114.வந்தவாசி–எஸ்.அம்பேத்குமார், 115.செய்யாறு–ஓ.ஜோதி பி.ஏ ,116. ஆரணி–மகாலட்சுமி கோவர்த்தனன் டிப்ளமோ,117.கலசப்பாக்கம்– பெ.சு.தி.சரவணன் எம்.ஏ., 118.கீழ்பென்னாத்தூர்–கு.பிச்சாண்டி எம்.ஏ, 119.திருவண்ணாமலை– எ.வ.வேலு எம்.ஏ., 120. செங்கம்–மு. பெ.கிரி, 121.அரூர்–அ. சண்முகம் பி. எஸ்.சி., 122.பாப்பிரெட்டிப்பட்டி– முனைவர். பெ.பழனியப்பன் எம்.எஸ்.சி.,பி.எச்டி., 123. பாலக்கோடு–டாக்டர் டி.என். வி.செந்தில்குமார் எம். எம்.பி.பி.எஸ்.,எம்.டி.ஆர்.டி, 124. பென்னாகரம்–எஸ்.ஏ. சத்யா, 125வேப்பனஹள்ளி–பி.எஸ்.சீனிவாசன், 126.பர்கூர்–தே.மதியழகன் பி.எஸ்சி., டி.எஃப்.டெக்., 127.திருப்பத்தூர்–அ. நல்லதம்பி, 128.ஜோலார்பேட்டை –கவிதா தண்டபாணி பி.ஏ., ,129,ஆம்பூர்–அ.செ.வில்வநாதன். , 130.கீழ்வைத்தினாங்குப்பம்–டாக்டர். ராஜேஸ்வரி மோகன்காந்தி எம்.பி.பி.எஸ், 131.அணைக்கட்டு–ஏ.பி.நந்தகுமார் எம்.ஏ., 132.வேலூர்–ப.கார்த்திகேயன், 133.ஆற்காடு–ஜெ.எல்.ஈஸ்வரப்பன் பி.இ., 134.இராணிப்பேட்டை–வினோத் காந்தி பி.எஸ்.சி.,135. காட்பாடி–துரைமுருகன் எம்.ஏ.,பி.எல் ,,136.காஞ்சிபுரம்–திருமதி. நித்யா சுகுமார்,137.உத்திரமேரூர்–க.சுந்தர் பி. எஸ்.சி.,138.மதுராந்தகம்–எஸ்.அமுலு பொன்மலர் ,139. செங்கல்பட்டு–எம்.கே.டி.கார்த்திக் தண்டபாணி பி.ஏ.பி.எல்.,140. தாம்பரம்–டாக்டர் ஆர்.எஸ். கிருத்திகாதேவி எம்.பி.பி.எஸ்.டி.ஜி.ஓ.,141. ஆலந்தூர்– தா.மோ .அன்பரசன், 142.சோழிங்கநல்லூர்–ச.அரவிந்த் ரமேஷ் , 143.மயிலாப்பூர்–தா.வேலு பி.ஏ. எல்.எல்.பி., 144.தியாகராயநகர்–ராஜா அன்பழகன் பி.காம்., 145.சைதாப்பேட்டை– மா.சுப்பிரமணியன் பி.ஏ. , 146. விருகம்பாக்கம்– பிரபாகர்ராஜா எம்.டெக்., எம்.பி.ஏ., 147.அண்ணாநகர்– நே.சிற்றரசு எம்.ஏ.எம்.பில். , 148.ஆயிரம் விளக்கு– டாக்டர் எழிலன் நாகநாதன் எம்.பி.பி.எஸ். எம்.டி., 149.சேப்பாக்கம் திருவல்லிக்கேணி–உதயநிதி ஸ்டாலின் பி.காம்., 150.துறைமுகம்–பி.கே. சேகர்பாபு, 151.இராயபுரம்–டாக்டர். சுபேர்கான் எம்.பி.பி.எஸ்., டி.ஆர்த்தோ, 152..எழும்பூர்–தமிழன் பிரசன்னா பி.எல்., 153.திரு.வி.க.நகர்–கே.எஸ். ரவிச்சந்திரன் பி.எஸ்.சி.,பி.எல்., 54. வில்லிவாக்கம்–கார்த்திக் மோகன் பி.இ.எம்.எஸ் , 155. பெரம்பூர்–ஆர்.டி.சேகர் பி.காம்., பி.எல்., 156.டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர்–ஜே.ஜே.எபினேசர் எம்.காம், .பி.எல்., 157.மாதவரம்–எஸ்.சுதர்சனம் எம்.ஏ.பி.எல்., 158.அம்பத்தூர்–டாக்டர் அ.பு.பூர்ணிமா எம்.பி.பி.எஸ். எம்.டி , 159.மதுரவாயல்–காரம்பாக்கம் கணபதி, 160.ஆவடி–சா.மு.நாசர், 161.பூந்தமல்லி–ஆ.கிருஷ்ணசாமி பி.ஏ.பி.எல் , 162. திருவள்ளூர்–வி.ஜி.ராஜேந்திரன் பி.இ., 163.கும்மிடிப்பூண்டி–டி.ஜெ. கோவிந்தராஜன், 164. கொளத்தூர்–முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

## சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் அமமுக வேட்பாளர்கள் பட்டியலை வெளியிட்டார் பொதுச் செயலாளர் டிடிவி தினகரன்



சென்னை. மார்ச்.29–

சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் அமமுக வேட்பாளர்கள் பட்டியலை பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் வெளியிட்டார். தமிழக சட்டசபை தேர்தலுக்கு இன்னும் ஒரு மாதம் கூட இல்லை. தேர்தல் தேதி நெருங்குவதால் அரசியல் கட்சிகள் தொகுதிப் பங்கீடு, வேட்பாளர்கள் அறிவிப்பு, பிரச்சாரம் என பணிகளை தீவிரப்படுத்தியுள்ளன. திமுக தொகுதி பங்கீட்டை நிறைவு செய்து வேட்பாளர்கள் பட்டியலை வெளியிட உள்ளது.தமிழ்நாடு செய்திகள்

அதிமுக சார்பில் 150 தொகுதிகள் போட்டியிடும் வேட்பாளர்கள் லிஸ்டை வெளியிட்டுள்ளது. 17 பெண் வேட்பாளர்களுக்கு இதில் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இன்னும் 17 தொகுதிகளுக்கான வேட்பளர்கள் அறிவிப்பு மட்டுமே மீதம் இருக்கிறது. அதிமுக கூட்டணியில் உள்ள பாஜகவும் வேட்பாளர்கள் அறிவிப்பினை வெளியிட்டுள்ளது. இந்த நிலையில்தான் அதிமுக பாஜக் கூட்டணியில் உள்ள அமமுகவும் இன்று வேட்பாளர்கள் லிஸ்டை வெளியிட்டுள்ளது.

சென்னை அடையாறில் உள்ள கட்சி அலுவலகத்தில் அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் நேற்று வேட்பாளர்கள் பட்டியலை வெளியிட்டார். தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தினகரனின் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் 11 தொகுதிகளில் போட்டியிடுகிறது. அதாவது, சைதாப்பேட்டை (செந்தமிழன்), திருப்பத்தூர் (ஞானசேகரன்), ஓட்டப்பிடாரம் (சுந்தரராஜன்), திருவையாறு (வேலுகார்த்திகேயன்), பெரியகுளம் (கதிர்காமு), காரைக்குடி (தேர்போகிபாண்டி), திருச்சி மேற்கு (ராஜசேகரன்), மன்னார்குடி (எஸ். காமராஜ்), பூந்தமல்லி (ஏழுமலை), மடத்துக்குளம் (சி.சண்முகவேலு), நாங்குநேரி (இசக்கிமுத்து) ஆகிய 11 தொகுதிகளில் அமமுக போட்டியிடுகின்றனர்.

## திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள 10 சட்டமன்ற தொகுதிகளில் அதிமுக சார்பில் போட்டியிடும் 7 வேட்பாளர்கள்

### அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி அறிவிப்பு

திருவள்ளூர் மார்ச் 29 :

திருவள்ளூர் சட்டமன்ற தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிடும் வேட்பாளர் பி.வி.ரமணா இதற்கு முன் 2006 சட்டமன்ற தேர்தலில் திமுக வேட்பாளர் இஏபி சிவாஜியிடம் போட்டியிட்டு தோல்வியை தழுவினார். திமுக வேட்பாளர் இஏபி சிவாஜி 64378 வாக்குகளும், அதிமுக வேட்பாளர் பிவிரமணா 55454 வாக்குகளும் பெற்றதால் தோல்வி அடைந்தார்.

2வது முறையாக 2011 சட்டமன்ற தேர்தலில் திமுக வேட்பாளர் இஏபி சிவாஜியிடம் போட்டியிட்டு வெற்றி பெற்றார். திமுக வேட்பாளர் இஏபி சிவாஜி 67689 வாக்குகளும், அதிமுக வேட்பாளர் பி வி ரமணா 91337 வாக்குகளும் பெற்று வெற்றி பெற்றார். 2016 தேர்தலில் போட்டியிட வில்லை... அதிமுக சார்பில் கமாண்டோ பாஸ்கரன் என்பவர் போட்டியிட்டார்.

3வது முறையாக முன் 2021 சட்டமன்ற தேர்தலில் திமுக வேட்பாளர் வி.ஜி.ராஜேந்திரனிடம் போட்டியிட்டு தோல்வியை தழுவினார். திமுக




வேட்பாளர் வி.ஜி.ராஜேந்திரன் 106316 வாக்குகளும், அதிமுக வேட்பாளர் பி.வி.ரமணா 85008 வாக்குகளும் பெற்றதால் தோல்வி அடைந்தார். மொத்தத்தில் அதிமுகவேட்பாளர் பிவி.ரமணா 3 முறை போட்டியிட்டு 2 முறை தோல்வியை தழுவியுள்ளார். திமுக வேட்பாளர் வி.ஜி.ராஜேந்திரன் 2 முறை போட்டியிட்டு 2 முறையும் அதிமுக வேட்பாளர் பி.வி. ரமணாவை தோற்கடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள 10 சட்டமன்ற தொகுதிகளில் அதிமுக(7)சார்பில்போட்டியிடும் வேட்பாளர்கள் பட்டியலை அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி அறிவித்துள்ளார்.

அதன்படி கும்மிடிப்பூண்டி தொகுதியில் அதிமுக சார்பில் பூண்டி ஒன்றிய செயலாளர் வி.சுதாகர் போட்டியிடுகிறார். பொன்னேரி தொகுதியில் அதிமுக சார்பில் திருவள்ளூர் வடக்கு மாவட்ட செயலாளரும் முன்னாள் எம்எல்ஏ.வுமான சிறுணியம் பலராமன் போட்டியிடுகிறார். திருத்தணி தொகுதியில் அதிமுக சார்பில் கழக அமைப்புச் செயலாளரும் முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர் கோ.அரி போட்டியிடுகிறார். திருவள்ளூரில் அதிமுக சார்பில் முன்னாள் அமைச்சரும், திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளருமான பி.வி. ரமணா போட்டியிடுகிறார்.

மாதவரம் தொகுதியில் அதிமுக சார்பில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளரும் முன்னாள் அமைச்சருமான மாதவரம் வி. மூர்த்தி போட்டியிடுகிறார்.மதுரவாயல் தொகுதியில் அதிமுக சார்பில் முன்னாள் அமைச்சரும் மத்திய மாவட்ட செயலாளருமான பா. பென்ஜமின் போட்டியிடுகிறார். திருவொற்றியூர் தொகுதியில் அதிமுகசார்பில்திருவொற்றியூர் பகுதி கழக செயலாளரும் முன்னாள் எம்எல்ஏ.வுமான கே.குப்பன் போட்டியிடுகிறார். இதே போல் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள மற்ற 3 தொகுதிகளான பூந்தமல்லியில் அமமுகவும், ஆவடியில் பாஜகவும், அம்பத்தூரில் பாமகவும் போட்டியிடும் என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி அறிவித்துள்ளார்.



விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் அங்காளம்மன் கோவிலில் பாட்டாளி மக்கள் கட்சியின் வேட்பாளர் செஞ்சி தொகுதி வேட்பாளர் கணேஷ் குமார் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வருகை மேல்மலையனூர் அங்காளம்மன் கோவிலுக்கு சிறப்பு தரிசனம் செய்தனர் பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக உற்சாக வரவேற்பு அளித்தனர் மாவட்டத் துணை செயலாளர் மருத்துவர் அருண்குமார் மாலை அணிவித்து சிறப்பான வரவேற்பு அளித்தார்.

# ஊத்தங்கரை அதிமுக வேட்பாளராக ஜி.வி.தமிழ்செல்வம் அறிவிப்பு

## மத்தூரில் உற்சாகக் கொண்டாட்டம்!







அதிமுக தலைமைக் கழகம் சார்பில், கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை சட்ட மன்றத் தொகுதியின் வேட்பாளராக, முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் (MLA), கழகப் பொதுக்குழு உறுப்பினருமான T.M.தமிழ்செல்வம் அவர்கள் மீண்டும் அறிவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த முறை சட்ட மன்ற உறுப்பினராகப் பணியாற்றிய தமிழ்செல்வம் அவர்களுக்கு, தற்போது இரண்டாவது முறையாக மீண்டும் போட்டியிட வாய்ப்பு வழங்கப் பட்டுள்ளது. இந்த அறிவிப்பு வெளியானதைத் தொடர்ந்து, மத்தூர் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் அதிமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பெரும் உற்சாகக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

வேட்பாளர் அறிவிப்பு வெளியானவுடன் மத்தூர் பகுதிக்கு வருகை தந்த T.M.தமிழ்செல்வம் அவர்கள், அங்குள்ள சிவன் கோயிலுக்குச் சென்று இறைவனுக்குச் சிறப்பு அர்ச்சனைகள் செய்து மனமுருக வழிபாடு நடத்தினார். அவருடன் அதிமுக மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் திரளாகச் சென்று சாமி தரிசனம் செய்தனர்.

மத்தூர் ஒன்றிய அதிமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் ஒன்று திரண்டு, மத்தூர் பேருந்து நிலையம் உள்ளிட்ட முக்கிய இடங்களில் பட்டாசுகளை வெடித்தும், பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கியும் தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். கழகப் பொதுக்குழு உறுப்பினராகவும், முன்னாள் எம்.எல்.ஏ வாகவும் சிறப்பாகப் பணியாற்றிய அவருக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டதை வரவேற்று தொண்டர்கள் உற்சாக முழக்கமிட்டனர்.

# ஆலம்பூண்டி செயின்ட் ஜோசப் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் மழலையர் பட்டமளிப்பு விழா




செஞ்சி மார்ச் 29

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அடுத்த ஆலம்பூண்டி செயின்ட் ஜோசப் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் மழலையர் பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

நிகழ்ச்சியை பள்ளி தாளாளர் டாக்டர் தெரேஸ்நாதன்,துணைத் தாளாளர் ஞான அமிர்தம் தலைமை தாங்கி துவக்கி வைத்தனர்.

சிறப்பு விருந்தினர்களாக ஆலம் பூண்டி பங்குத் தந்தை அசோக்குமார், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் பிரசாத், ஓய்வு பெற்ற உடற்கல்வி இயக்குனர் சாமிக் கண்ணு கலந்து கொண்டு மழலையர் களுக்கு பட்டம் வழங்கி சிறப்புரையாற்றினர்.

நிகழ்ச்சியில் பள்ளி முதல்வர் டாக்டர் கிரீன் மேரி சோபியா அருமை பினேஷ் ராஜ் அருமை தினேஷ் ராஜ் செல்வக்குமார் ராஜன் கலந்து கொண்டனர் .

ஆசிரியர் மோகன் அனைவரும் வரவேற்றார். மாணவர்களின் கலை நிகழ்ச்சி நடை பெற்றது. கலை நிகழ்ச்சிகளை ஆசிரியர்கள் சுகந்தி அருள்மொழி ஏற்பாடு செய்தனர்.

ஆசிரியர் பிரபா நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். நிகழ்ச்சியில் மாணவ மாணவிகள் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

# மக்கள் பொது மனித சமூக சேவை கலந்தாய்வு கூட்டம்!!

திருப்பூர் :மார்ச்29



மனிதனின் ஒழுக்க முறைகள் அனைவருக்கும் மிகவும் அவசியம். மக்களுக்கு தேவைப்படும் உதவிகளை உடனுக்குடனே செய்து அவர்களுக்கு ஆலோசனை வழங்கி வரும் மக்கள் பொது மனித சமூக சேவை பயணிக்கும் நிர்வாகிகள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அமைப்பில் பயணிக்கும் தலைவர்கள் செயலாளர் பொருளாளர்கள் நிர்வாகிகள் மகளிர் அணி மற்றும் திருப்பூர் வடக்கு மாவட்ட நிர்வாகிகள் அனைவரையும் வருக வருக என இருகரம் கூப்பி வரவேற்கிறேன்.

தங்களை அன்புடன் வரவேற்கும் என்றென்றும் உங்களுடன் எம். பி .எஸ் தலைமை செயலாளர் பாபு

# சேலத்தில் மாவட்ட ஆட்சியரின் உத்தரவின் பேரில் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு பயிற்சி.

சேலம். மார்ச்.29–

சேலம் மாவட்ட தேர்தல் அலுவலரும், கலெக்டருமான பிருந்தாதேவி கூறியதாவது;சேலம் மாவட்டத்தில் அமைந்துள்ள 3,468 வாக்குச்சாவடிகளில் 16,648 அலுவலர்கள் வாக்குச்சாவடி மையங்களில் பணிபுரியவுள்ளனர்.

இந்த அலுவலர் களுக்கு பயிற்சிகளானது நேற்று (28ம் தேதி)சேலம் மாவட்டத்தில் உள்ள 11 சட்டமன்ற தொகுதிகளிலும் அமைக்கப்பட்டுள்ள பயிற்சி மையங்களில் நடக்கிறது.கெங்கவல்லி சட்டமன்ற தொகுதிக்கு தேவியாக்குறிச்சி பாரதியார் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலும், ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு ஆத்தூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியிலும், ஏற்காடு சட்டமன்ற தொகுதிக்கு மேட்டுப்பட்டி, சேலம் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியிலும், ஓமலூர் சட்டமன்ற தொகுதிக்கு கருப்பூர் பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலும், மேட்டூர் சட்டமன்ற தொகுதிக்கு மாதையன்குட்டை எம்.ஏ.எம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியிலும், எடப்பாடி சட்டமன்ற தொகுதிக்கு கொங்கணாபுரம் ஏ.ஜி.என் மேல்நிலைப்பள்ளியிலும், சங்ககிரி சட்டமன்ற தொகுதிக்கு சங்ககிரி சண்முகா பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியிலும், சேலம் மேற்கு சட்டமன்ற தொகுதிக்கு சேலம் சோனா கலை அறிவியல் கல்லூரியிலும், சேலம் வடக்கு சட்டமன்ற தொகுதிக்கு சேலம் ஜெயராம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலும், சேலம் தெற்கு சட்டமன்ற தொகுதிக்கு அம்மாபேட்டை ஸ்ரீ சக்திகைலாஸ் மகளிர் கல்லூரியிலும், வீரபாண்டி சட்டமன்ற தொகுதிக்கு கடத்தூர் அக்ரஹாரம் அரசு சட்ட கல்லூரியிலும் என 11 மையங்களில் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு காலை 9.30 மணி முதல் மாலை 4 மணி வரை பயிற்சிகள் நடக்கிறது. ஒவ்வொரு பயிற்சி மையங்களிலும் 1200 முதல் 1500 வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது. இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரைப்படி மூன்று கட்டங்களாக பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது. பயிற்சி மையங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு அவர் கூறினார்.



# நெல்லை, தூத்துக்குடி மாவட்ட பள்ளி, கல்லூரி என்சிசி மாணவிகள் 300 பேருக்கு துப்பாக்கிச் சுடுதல் பயிற்சி

தியாகராஜ நகர் : மார்ச்.29–

நெல்லை, தூத்துக்குடி மாவட்ட பள்ளி கல்லூரிகளின் என்சிசி மாணவிகள் 300 பேருக்கு துப்பாக்கிச் சுடும் பயிற்சி பாளையங்கோட்டை ஜான்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று நடந்தது. என்சிசி சார்பில் ஆண்டுதோறும் குடியரசு தின விழாவில் பங்கேற்பதற்கான துப்பாக்கி சூடுதல் தகுதி பயிற்சி நிகழ்ச்சி மண்டல மாநில அளவில் நடத்தப்பட்டு தகுதியுள்ள என்சிசி மாணவிகள் தேர்வு செய்யப்படுகின்றனர். 2027ம் ஆண்டு குடியரசு தின விழா போட்டியில் பங்கேற்பதற்காக இப்போதே முதற்கட்ட துப்பாக்கிச் சுடுதல் பயிற்சி அகில இந்திய அளவில் முகாம் தொடங்கப்பட்டு நடந்து வருகிறது.இந்திய அரசியல்

அந்த வரிசையில் என்சிசி மகளிர் 3ம் படை பிரிவு மாணவிகளுக்கு துப்பாக்கிச் சூடு பயிற்சி பாளையங்கோட்டை ஜான்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினமும், நேற்றும் என தொடர்ந்து இரு நாட்கள் நடத்தப்பட்டது.

இதில் நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள பள்ளி, கல்லூரிகளின் என்சிசி மாணவிகள் 300 பேர் பங்கேற்று பயிற்சி பெற்றனர். இவர்களுக்கு ராணுவ அதிகாரி கமாண்டிங் கர்னல் டி எஸ் சமந்த் (சேனா மெடல்) தலைமையில் பாயிண்ட் 22 துப்பாக்கி மூலம் பயிற்சி அளிக்கப்பட்டது.

ரிசில்தார் மேஜர் ஜவாலா பிரசாத், சுபேதார் சுனில் குமார் என்சிசி முதல் நிலை அலுவலர்கள் கிறிஸ்டியான், கவிதா, 2ம் நிலை அலுவலர் செல்வி மற்றும் என்சிசி பயிற்சியாளர்கள் பயிற்சி அளித்தனர். என்சிசி மாணவிகள் ஆர்வமுடன் பங்கேற்று துப்பாக்கிச் சுடும் பயிற்சி பெற்றனர்.

இந்த பயிற்சியில் சிறப்பிடம் பெறும் மாணவிகள் அடுத்த கட்டமாக மதுரையில் நடைபெறும் பயிற்சியில் பங்கேற்க தகுதி பெறுவார்கள். அதில் தேர்வு செய்யப்படுபவர்கள் அடுத்த ஆண்டு குடியரசு தின போட்டியில் பங்கேற்க உள்ள தேசிய தகுதி போட்டியில் கலந்து கொள்வார்கள்.

கடந்த ஆண்டு மகளிர் 3ம் படை பிரிவில் பயிற்சி பெற்ற என்சிசி மாணவிகளின் பர்வதவர்த்தினி என்பவர் டெல்லி நிகழ்ச்சியில் பகுதி பெற்று பங்கேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழக சட்டமன்ற பொது தேர்தல 100% வாக்குப்பதிவு உறுதி செய்ய பேரணி..

## ஈரோடு தயா அறக்கட்டளை சார்பில் சிறப்பான ஏற்பாடு.





ஈரோடு. மார்ச். 29

நடைபெற இருக்கும் சட்டமன்றத் தேர்தலில் 100 சதவீதம் வாக்குப்பதிவை உறுதி செய்யும் விதமாக பெருந் துறையில் வாக்குப்பதிவு விழிப்புணர் பேரணி நடைபெற்றது.

வருகின்ற 2026 சட்டமன்ற பொதுத் தேர்தல் ஏப்ரல் 23ஆம் தேதி நடைபெற இருக்கின்றது. இதைத் தொடர்ந்து அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் 100% வாக்குப்பதிவு செய்ய வாக்காளர்கள் மத்தியில் வாக்குப்பதிவு உறுதி செய்யும் விழிப்புணர்வு பேரணி நடைபெற்ற வருகிறது.

அந்த வகையில் ஈரோடு மாவட்டம் 103. பெருந்துறை சட்டமன்ற தொகுதியில் 100% வாக்குப்பதிவு குறித்த வாக்காளர்கள் மத்தியில் விழிப்புணர்வு பேரணி ஈரோடு மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலகம் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து பெருந்துறை ஈங்கூர் இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில், மாணவர்கள் மத்தியில் நூறு சதவீதம் வாக்குப்பதிவு குறித்து விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது. மாணவர்கள் மத்தியில் உறுதிமொழி எடுக்கப்பட்டது. பேரணியை மாவட்ட வளங்கள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் குடியரசுத்து துவக்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் ஹிந்துஸ்தான் கல்லூரி முதல்வர் ராமன், இ எல் சி ஒருங்கிணைப்பாளர் திவ்யா, தாலுகா வழங்கல் அலுவலர் ராஜகோபால், தயா அறக்கட்டளை நிறுவனத் தலைவர் டாக்டர் என் எம் பிரதீப், உள்பட தேர்தல் நடத்தும் ஆளுவாளாளர்கள் மற்றும் மாணவர்கள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி ஈரோடு மாவட்டம், சென்னிமலை சென்கோப்டெக்ஸ் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் நடைபெற்ற தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் இராட்டையில் நூல்நூற்று தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

# கலை நிகழ்ச்சிகளுடன் தொடக்கப் பள்ளி ஆண்டு விழா..!



வந்தவாசி, மார்ச் 29:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த வெண்குன்றம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற ஆண்டு விழாவிற்கு பள்ளி தலைமை ஆசிரியர் க.வாசு தலைமை தாங்கினார். உதவி ஆசிரியை ம.சசிகலா ஆண்டறிக்கை வாசித்தார். விழாவில் வட்டார வளமைய ஆசிரிய பயிற்றுநர்கள் பார்த்திபன், திருவேங்கட லட்சுமி மற்றும் வட்டார வள மைய கணக்காளர் மற்றும் வந்தை முன்னேற்ற சங்கம், சிற்பி தொண்டு நிறுவனம், ரோட்டரி கிளப், எக்ஸ்னோரா கிளப், கற்க கசடற அமைப்பு மற்றும் வந்தை வட்ட கோட்டை தமிழ்ச் சங்க நிர்வாகிகள், ஒன்றிய அளவிலான இருபால் ஆசிரியர்கள் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர். மேலும் கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்ற பள்ளி மாணவர்களுக்கு பரிசு பொருட்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. நூலக பயன்பாட்டின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் நூலக புத்தகங்களும் வழங்கப்பட்டது. இறுதியில் உதவி ஆசிரியை ம.மகேஸ்வரி நன்றி கூறினார்.

## இந்திரா நகர் தொகுதியில் போட்டியிடும் சுயேட்ச்சை வேட்பாளர் ராபர்ட் ஜேசுதாஸ் ஜிப்மர் குடியிருப்பு பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்



வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் இந்திரா நகர் தொகுதியில் சுயேட்ச்சை வேட்பாளர் ராபர்ட் ஜேசுதாஸ் அவர்கள் பேட்ஸ்மேன் சின்னத்தில்போட்டியிருக்கிறார். அவர் நேற்று தனது ஆதரவாளர் களுடன் இந்திரா நகர் தொகுதிக்குட்பட்ட ஜிப்மர் குடியிருப்பு பகுதிகளில் உள்ள வீடுகளில் பேட்ஸ்மேன் சின்னத்தில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது அவர் அப்பகுதி மக்களிடம் என்னை வெற்றி பெற செய்தால் இந்திரா நகர் தொகுதி முழுவதும் சுகாதாரமான குடிநீர் வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் மழை நீர் தேங்காமல் வசதி வாய்ப்புகள் ஏற்படுத்தித் தருவதாகவும் மேலும் படித்த இளைஞர்களுக்கு பல்வேறு வேலை வாய்ப்புகள் மற்றும் இந்திரா நகர் தொகுதியை முன்மாதிரியான தொகுதியாக மாற்றுவேன் எனவும் உறுதியளித்தார். இந்நிகழ்ச்சியில் வாக்கு சேகரிப்பின் போது அவருடன் ஏராளமான பெண்கள் மற்றும் அவருடைய ஆதரவாளர் கள் திரளாக கலந்து கொண்டு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

## பிரதமர் மோடியின் கேரளா வருகையை முன்னிட்டு கோவையில் ட்ரோன்கள் பறக்க தடை..!

கோவை:

பிரதமர் மோடியின் கேரளா வருகையை முன்னிட்டு, கோவையின் முக்கியமான பகுதிகளில் ட்ரோன்கள் பறக்க தடை விதிக்கப்பட்டது. இன்ற மதியம் 2 மணியளவில் கோவை விமான நிலையம் வரும் பிரதமர் மோடி ஹெலிகாப்டர் மூலம் பாலக்காடு செல்கிறார். கேரளம் தேர்தல் பரப்புரைக்காக தேசிய ஜனநாய கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரதமர் மோடி நாளை பாலக்காடு, திருச்சூர் பகுதிகளில் பரப்புரை மேற்கொள்கிறார்.

## உழவர்கரை தொகுதியில் முனைவர் மு. லாவண்யா அவர்களின் சூறாவளிப் பிரச்சாரம்: மக்கள் மத்தியில் அமோக வரவேற்பு!



புதுச்சேரி | மார்ச் 29

புதுச்சேரியில் வரும் ஒன்பதாம் தேதி தேர்தல் நடைபெற உள்ள நிலையில், அனைத்து தொகுதிகளிலும் வேட்பாளர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக, புதுச்சேரி உழவர்கரைத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் தேர்தல் களம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

அஜீஸ் நகர் மற்றும் மூகாம்பிகை நகரில் உற்சாக வரவேற்பு

உழவர்கரை தொகுதியில் மிகவும் எதிர்பார்க்கப்படும் நம்பிக்கை நட்சத்திரமும், அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகத்தின் சின்னம்மாவின் (புரட்சித்தாய்) ஆசி பெற்ற வேட்பாளருமான சமூக சேவகி முனைவர் மு. லாவண்யா அவர்கள் இன்று தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

தொகுதிக்குட்பட்ட அஜீஸ் நகர் மற்றும் மூகாம்பிகை நகர் ஆகிய பகுதிகளில் ஒவ்வொரு வீடாகச் சென்று அவர் வாக்கு சேகரித்தார். செல்லும் இடமெல்லாம் தொகுதி மக்கள் அவருக்கு ஆரத்தி எடுத்தும், மலர் தூவியும் அமோக வரவேற்பு அளித்தனர்.

“எட்டு ஆண்டு கால சேவை – ஒரு முறை வாய்ப்பு தாருங்கள்”

வாக்கு சேகரிப்பின் போது மக்களிடையே பேசிய முனைவர் மு. லாவண்யா அவர்கள் உருக்கமாகக் குறிப்பிட்டதாவது:

“கடந்த எட்டு ஆண்டு களாக இந்தப் பகுதியில் ஒரு சாதாரணச் சமூகப் பணியாளராக உங்களோடு நான் பயணித்து வருகிறேன். அதிகாரத்தில் இல்லாத போதும் உங்கள் கஷ்டங்களை உணர்ந்து, என்னால் முடிந்த அனைத்து மக்கள் பணிகளையும், உதவிகளையும் தொடர்ந்து செய்து வருகிறேன்.

இந்த ஒரு முறை எனக்கு வாய்ப்பு தாருங்கள். உங்கள் ஆதரவோடு நான் வெற்றி பெற்றால், கண்டிப்பக இந்த உழவர்கரைத் தொகுதியை புதுவையின் முதல் மாதிரித் தொகுதியாக (Model Consti tuency) மாற்றிக் காட்டுவேன்!”

அதிகரிக்கும் ஆதரவு

ஒவ்வொரு வீடாகச் சென்று பெரியவர்களிடம் ஆசி பெற்றும், இளைஞர்களிடம் தொகுதியின் வளர்ச்சித் திட்டங்கள் குறித்துப் பேசியும் வாக்கு சேகரித்த அவருக்கு மக்கள் மத்தியில் பலத்த ஆதரவு பெருகி வருகிறது.

தென்னந்தோப்பு சின்னத்தில் போட்டியிடும் முனைவர் மு. லாவண்யா அவர்களின் இந்தத் தீவிரப் பிரச்சாரம், உழவர்கரை தொகுதி தேர்தல் களத்தில் ஒரு புதிய உத்வேகத்தை ஏற்படுத்தியுள்ளது

# நான் முதல்வன் திட்டத்தில் விவசாய ஏழை குடும்பத்தில் பிறந்த பெண்கள் குடிமைப் பணியில் தேர்ச்சி பெற்று வருகின்றனர்

## முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ பேச்சு




செஞ்சி. மார்ச்.29–

தமிழ்நாடு முதலமைச்சரின் தொலைநோக்கு திட்டமான நான் முதல்வன் திட்டத்தில் விவசாய ஏழை குடும்பத்தில் பிறந்த பெண்கள் குடிமைப் பணியில் தேர்ச்சி பெற்று வருவதாக முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தெரிவித்தார்.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அடுத்த அண்ணமங்கலத்தில் உள்ள சங்கமம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி சார்பில் 17 வது கல்லூரி ஆண்டு விழா மற்றும் கல்லூரியில் முதலிடம் பெற்றவர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி கல்லூரி வளாகத்தில் உள்ள மகாத்மா காந்தி கூட்டரங்கில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு கல்லூரி தாளாளர் அஞ்சஞ்சேரி கணேசன் தலைமை தாங்கினார். கல்லூரி தலைவர் அரசு வழக்கறிஞர் கிருஷ்ணன், துணை தலைவர், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் பரசிவம், ஆகியோர் முன்னிலை வகித்தனர் கல்லூரி முதல்வர் முனைவர் ஹரிகுமார் அனைவரும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில்சிறப்பு விருந்தினராக முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏகலந்து கொண்டு சிறப்புரையாற்றி பல்வேறு துறைகளில் சிறப்பிடம் பெற்ற கல்லூரி மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ பேசுகையில் :

கல்லூரியில் படிக்கக்கூடிய மாணவ, மாணவிகள் முதலில் ஒழுக்கத்துடன் கல்வி கற்க வேண்டும்.ஒழுக்கம் நேர்மை உண்மை உழைப்பு விசுவாசத் துடன் நாம் கல்வி கற்று உயர்ந்த இடத்திற்கு செல்ல வேண்டும் அந்த வகையில் விவசாய குடும்பத்தில் பிறந்த ஏழை மாணவி வீட்டில் கரண்டி பிடித்தவர் இன்று புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் ஊக்கத்தொகை மாதம் ஆயிரம் ரூபாய் பெற்று, நான் முதல்வன் திட்டத்தில் 7500 பெற்று ,ஐஏஎஸ் படிப்பதற்கு 25000 பெற்று தேர்வு எழுதி இன்று ஒரு ஐஏஎஸ் ஆக தேர்வு பெற்று சாதனை படைத்துள்ளார் .அந்த வகையில் கல்லூரி படிக்கும் மாணவ மாணவிகள் ஆகிய நீங்கள் இது போன்ற திட்டங்களில் பயனடைய வேண்டுமென முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ கேட்டுக் கொண்டார்.

நிகழ்ச்சியில் முதுநிலை ஆசிரியர், ஊக்குமளிக்கும் பேச்சாளர் மில்டன் கலந்துகொண்டு கல்லூரி மாணவர்களுக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் கல்லூரி மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இதில் ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், கல்லூரி துறைத் தலைவர்கள் ,உதவி பேராசிரியர்கள், அலுவலக பணியாளர்கள் ,கல்லூரி மாணவ மாணவிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கல்லூரி நிர்வாக அலுவலர் விஜயபாஸ்கர் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

## சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு எஸ்பி தலைமையில் துணை ராணுவத்தினர் கொடி அணிவகுப்பு

திட்டக்குடி : திட்டக்குடியில் சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு தேர்தல் ஆணைய உத்தரவுப்படி திட்டக்குடி சட்டமன்ற (தனி) தொகுதியில் காவல்துறை சார்பில் பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக தேர்தல் பாதுகாப்பை



உறுதிப்படுத்தும் விதமாக திட்டக்குடியில் மாவட்ட எஸ்பி ஜெயக்குமார் தலைமையில் போலீசார் மற்றும் துணை ராணுவப் படையினர் கொடி அணிவகுப்பு நடந்தது.

திட்டக்குடி நகராட்சிக்குட்பட்ட வதிஷ்டபுரம் பஸ் நிறுத்தத்தில் இருந்து தொடங்கிய பேரணி தாலுகா அலுவலகம், பேருந்து நிலையம், நெடுஞ் சாலைத்துறை வழியாக கடைவீதி, அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி வரை சென்று மீண்டும் தாலுகா அலுவலகம் வரை சென்றனர்.

திட்டக்குடி டிஎஸ்பி பார்த்திபன், இன்ஸ்பெக்டர்கள் இளஞ்செழியன், இளவரசன், பழனிச்சாமி, செல்வநாயகம், அனைத்து மகளிர் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் ரம்யா சுல்தானா, சப்இன்ஸ்பெக்டர்கள், துணை ராணுவப்படையினர் மற்றும் போலீசார் பலர் கலந்து கொண்டனர்.

## காஞ்சிபுரம் உள்ளிட்ட 4 எஸ்பிக்கள் மீண்டும் மாற்றம்

சென்னை: மார்ச்.29

தமிழகத்தில் வருகிற ஏப்ரல் 23ம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது. இந்நிலையில் சில நாட்களுக்கு முன்னர் ஈரோடு, நாகப்பட்டினம் பாலகிருஷ்ணன், கரூர் ஜோஷ் தங்கையா, விருதுநகர் மாவட்ட எஸ்பி கண்ணன் ஆகியோர் மாற்றப்பட்டிருந்தனர். இந்நிலையில், நேற்று இரவு மேலும் 4 எஸ்பிக்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். அதில் காஞ்சிபுரம் எஸ்பி சண்முகம் மாற்றப்பட்டு, ஜவகர் நியமிக்கப்பட்டுள்ளார். பெரம்பலூர் எஸ்பி அனிதா மாற்றப்பட்டு கே.பிரபாகர், தஞ்சாவூர் எஸ்பி ராஜாராம் மாற்றப்பட்டு சுந்தரவதனம், தென்காசி எஸ்பி மாதவன் மாற்றப்பட்டு மயில்வாகனன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இதனால் தேர்தல் அறிவிப்புக்குப் பிறகு 8 மாவட்ட எஸ்பிக்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்

இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி ஈரோடு மாவட்டம, சென்கோப்டெக்ஸ் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் நடைபெற்ற தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் தேர்தல் அரசன் சின்னம் நெய்யப்பட்ட போர்வை மற்றும் கைகுட்டையினை பார்வையிட்டார்.

## மரியாதை நிமித்த சந்திப்பு.




சேலம் மேற்கு மாவட்ட தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பில்,சேலம் மேற்கு மாவட்ட கழக செயலாளர் சுரேஷ் பாபு,சேலம் மாநகர மாவட்ட கழக செயலாளர் திரு.ராதாகிருஷ்ணன்சேலம் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இளங்கோவன் அவர்கள் மற்றும் ஒன்றியம்,நகரம்,பகுதி,பேரூர் கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் மரியாதை நிமித்தமாக சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி என் செல்வ கணபதியை நேரில் சந்தித்தனர்.

## சேலம்,ஆத்தூர் தேசிய நெடுஞ்சாலையில் அறுந்து விழுந்த உயர் மின்னழுத்த கம்பிகளால் பரபரப்பு.

சேலம். மார்ச்.29–

சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகே சேலம் சென்னை தேசிய நெடுஞ் சாலையில் அறுந்து விழுந்த மின் கம்பிகளை வாகன ஓட்டிகள் சுதாரித்துக் கொண்டு வாகனங்களை முன் கூட்டியே சாலையிலே நிறுத்தியதால் நல் வாய்ப்பாக அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது.

அந்த பகுதியில் சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாக மின்சாரம் துண்டிக் கப்பட்டுள்ளதால் மக்கள் அவதிக்குள்ளாகி உள்ளனர்.



சேலம் மாவட்டம், ஆத்தூர் அருகே சேலம் சென்னை தேசிய நெடுஞ்சாலையில் நாள் தோறும் ஆயிரக்கணக் கான வாகனங்கள் சாலையில் கடந்து சென்று வரும் நிலையில், அப்பம்மா சமுத்திரம் பகுதியில் திடீரென உயர் மின்னழுத்த கம்பிகள் சேலம் சென்னை தேசிய நெடுஞ் சாலையில் அறுந்து விழுந்தது. இதனை பார்த்த வாகன ஓட்டுநர்கள் நல்வாய்ப் பாக சுதாரித்துக் கொண்டு சாலையிலே வாகனத்தை நிறுத்திய தால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது.

இது குறித்து மின்வாரியத் துறை அதிகாரிகளுக்கு அளித்த தகவலின் அடிப்படையில் மின்வாரிய துறை அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு சென்று மின் கம்பிகளை சீரமைக்கும் பணியில் மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் காரணமாக, அப்பம்ம சமுத்திரம், பனமரத்துப்பட்டி சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒரு மணி நேரத்திற்கு மேலாக மின்சாரம் துண்டிக்கப் பட்டுள்ளதால் மக்கள் அவதிக்குள்ளாகி உள்ளனர்.

# கும்மிடிப்பூண்டி சட்டமன்ற தொகுதியில் பல்வேறு பகுதியில் சட்டமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்




திருவள்ளூர் மார்ச் 29 : திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற தொகுதிக்குட்ப்பட்ட ஓதப்பை பகுதியில் செயல்படும் தனியார் தொழிற்சாலையில் “தேர்தல் திருவிழா தமிழ்நாட்டின் பெருவிழா” சட்டமன்ற பொதுத் தேர்தல்2026 யை முன்னிட்டு 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மு.பிரதாப் தலைமையில் வாக்காளர் விழிப்புணர்வு உறுதிமொழியினை அனைவரும் ஏற்றுக் கொண்டு, கையெழுத்து இயக்கத்தில் கையெழுத்திட்டு துவக்கி வைத்தார்.

பின் வாக்காளர் விழிப்புணர்வு ஒட்டு வில்லைகளை தொழிலாளர்களின் தொழிற்சாலை தலை கவசங்களில் ஒட்டியும், சான்றிதழ்களையும் வழங்கி, செஃல்பி பூத்தில் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார். இதில் தொழிற்சாலைகளில் பணிபுரியும் 500க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்து கொண்டு விழிப்புணர்வு பெற்றனர்.

அதனைத்தொடர்ந்து, மெய்யூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் மாவட்ட தேர்தல் அலுவலர் வாக்குச்சாவடி மையத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அடிப்படை வசதிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மேலும் சீத்தஞ்சேரி பகுதியில் மாவட்ட தேர்தல் அலுவலர் மு.பிரதாப் பறக்கும் படை மற்றும் நிலை குழுக்கள் வாகனங்கள் சோதனையிடும் பணிகளை நேரில் ஆய்வு மேற்கொண்டு விவரங்களை கேட்டறிந்தார்.

இதில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநரும் இணை இயக்குநருமான வை.ஜெயக்குமார், கும்மிடிப்பூண்டி தேர்தல் நடத்தும் அலுவலரும் தனித்துறை ஆட்சியருமான வெங்கடேஷன், உதவி இயக்குநர் (பயிற்சி) மோகன், உதவி தேர்தல் நடத்தும் அலுவலரும் ஊத்துக்கோட்டை வட்டாட்சியருமான ராஜேஷ், தனியார் தொழிற்சாலை பிரிதிகள், பணியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# செஞ்சி தொகுதியில் தேர்தல் பயிற்சிக்கு வருகை தந்த ஆசிரியர்களிடம் திமுகவினர் வாக்கு சேகரித்தனர்



தமிழகத்தில் சட்டமன்றத் தேர்தல் வரும் ஏப்ரல் 23ஆம் தேதி ஒரே கட்டமாக நடைபெறுகிறது இதற்கான மனு தாக்கல் நாளை மறுநாள் 30 ஆம் தேதி தொடங்க உள்ளன இந்நிலையில் தேர்தல் பணியில் ஈடுபடும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு மூன்று கட்ட பயிற்சிகள் அளிக்க தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது அதன்படி செஞ்சி தொகுதிக்கான தேர்தல் பயிற்சி வகுப்புகள்செஞ்சி அரசு பெண்கள் மேல் நிலைபள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

தேர்தல் வகுப்பில் பங்கேற்றுச் சென்ற ஆசிரியர்களிடம் திமுக சார்பில் ஒன்றிய பெருந்தலைவர் விஜய குமார் தலைமையில் பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன் நகர செயலாளர் கார்த்திக் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரத்தனர்.

இதில் நிர்வாகிகள் நெடுஞ்செழியன், ஜான் பாஷா, மோகன், பொன்னம்பலம், சங்கர் ,ஜே .எஸ். சர்தார், தொண்டரணி பாஷா, மாணவரணி வினோத், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பால கிருஷ்ணன், துணைத் தலைவர் ராமு,ஹாஜி, ஷரீப்,சந்திரன், பாபு, தாஜ்,பன்னீர் கமிட்டி சங்கர் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# சட்டமன்றத் தேர்தல் தூதுவர்களான மெய்யன், மெய்யாள் பொம்மை விழிப்புணர்வு அஞ்சல் தலைகள்

## *தஞ்சை கலெக்டர் வெளியிட்டார்




தஞ்சாவூர் : மார்ச்.29– தமிழகத்தில் முதல் முறையாக சட்டமன்றத் தேர்தல் தூதுவர்களான மெய்யன் மெய்யாள் விழிப்புணர்வு அஞ்சல் தலைகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் வெளியிட்டார்.

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் வட்டம் தாராசுரம் ஐராவதீஸ்வரர் கோயில் அருகே 2026 சட்டமன்ற பொது தேர்தலை முன்னிட்டு மாவட்ட தேர்தல் அலுவலரும், கலெக்டருமான பிரியங்கா பங்கஜம் நேற்று மெய்யன் மெய்யாள் தேர்தல் விழிப்புணர்வு சிறப்பு தபால் தலையினை வெளியிட்டார்கள்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி 100 சதவீதம் வாக்களிப்பதை உறுதி செய்யும் வகையில் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்திய அரசியல்

இதன் அடிப்படையில் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு தேர்தல் தூதுவர்களாக மெய்யன் மெய்யாள் தேர்ந்தெடுக்கப்பட்டு மாவட்டம் முழுவதிலும் அனைத்து பகுதிகளிலும் தேர்தல் குறித்து வாக்காளர்களிடையே வாக்களிப்பதன் அவசியம் குறித்து எடுத்துரைக் கப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக தமிழகத்தில் முதல் முறையாக மக்கள் பயன்படுத்தும் வகையில் கும்பகோணம் சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட தாராசுரம் ஐராதீஸ்வரர் கோயிலில் தஞ்சாவூர் மாவட்டத்திற்கான சட்டமன்றத் தேர்தல் தூதுவர்களான மெய்யன் மெய்யாள் குறித்த விழிப்புணர்வு அஞ்சல் தலைகளை மாவட்ட தேர்தல் அலுவலரான கலெக்டர் பிரியங்கா பங்கஜம் வெளியிட்டார்.

மேலும் அங்கிருந்த பொதுமக்களிடம் நேர்மையாக 100% வாக்களிப்பதன் அவசியம் குறித்த துண்டு பிரசுரங்களையும் வழங்கி அனைவரும் தேர்தலில் வாக்களிக்க வேண்டும் என மாவட்ட கலெக்டர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கும்பகோணம் வருவாய் கோட்டாட்சியர் திருமலை, மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் ரவிச்சந்திரன், கும்பகோணம் மாநகராட்சி ஆணை யாளர் காந்திராஜன், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் சந்திரசேகரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# திருவள்ளூர் சட்டமன்ற தொகுதி அதிமுக வேட்பாளர் பி. வி. ரமணாவுக்கு வரவேற்பு



திருவள்ளூர் மார்ச் 29 : திருவள்ளூர் சட்டப் பேரவை தொகுதியின் அதிமுக வேட்பாளர் பி.வி.ரமணா அறிவித்ததை தொடர்ந்து கூட்டணி கட்சியினருடன் அம்பேத்கர் மற்றும் எம்.ஜி.ஆர் திருவுருவ சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார்.

திருவள்ளூர் மாவட்டத்தில் 10 சட்டப் பேரவை தொகுதிகளில் 7 அதிமுகவிற்கும், மீதமுள்ள 3 தொகுதிகள் கூட்டணி கட்சிகளுக்கும் ஒதுக்கப்படவுள்ளன. இந்த நிலையில் அதிமுக தலைமை 7 தொகுதிக்கான வேட்பாளர்களை அறிவித்தது. அதில் திருவள்ளூர் சட்டப்பேரவை தொகுதியில் முன்னாள் அமைச்சர் பி.வி.ரமணா வேட்பாளராக அறிவிக்கப்பட்டார்.

அதைத் தொடர்ந்து அதிமுக கூட்டணி கட்சிகளுடன் ஆயில் மில் பகுதியில் உள்ள அம்பேத்கர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தார். பின்னர் காந்தி சாலையில் உள்ள எம்.ஜி.ஆர் திருவுருவ சிலைக்கும் மாலை அணிவித்து மரியாதை செய்தார். அதைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார். அதையடுத்து கூட்டணி கட்சியினருடன் வெற்றி பெறவும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

பின்னர் அதிமுக மேற்கு மாவட்ட கட்சி அலுவலகத்தில் கூட்டணி கட்சி நிர்வாகிகளையும் சந்தித்து ஆலோசனையும் மேற்கொண்டார். அப்போது, உடன் அதிமுக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஆகியோர் திரளாக பங்கேற்றனர்.

# வரும் 30ம் தேதி தொடங்குகிறது வேட்பு மனுதாக்கல் முன்னேற்பாடு பணிகள்

## *மாவட்ட தேர்தல் அலுவலர் ஆய்வு



விருத்தாசலம் : கடலூர் மாவட்டம் விருத்தாசலம் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகமான கோட்டாட்சியர் அலுவலகத்தில், ஏப்ரல் 23ம் தேதி சட்டமன்ற தேர்தல் நடைபெறுவதை ஒட்டி வரும் 30ம் தேதியில் இருந்து வேட்பு மனு தாக்கல் தொடங்கப்பட உள்ளது.

வேட்பு மனுத்தாக்கல் செய்வதற்கான முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு பணிகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் சிபி ஆதித்யா செந்தில்குமார் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது வேட்பாளர்கள், வேட்பு மனு தாக்கல் செய்யும்போது தேர்தல் நடத்தை விதிமுறைகளை முறையாக பின்பற்ற தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. அதற்கிணங்க கடலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிக்கான தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகங்களில் வேட்பாளர்கள் வேட்பு மனு தாக்கல் செய்வதற்கு தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல், கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு கண்காணித்தல், வேட்பு மனு தாக்கல் செய்வதை முறையாக ஒளிப்பதிவு செய்திடுதல் உள்ளிட்ட முன்னேற்பாடு பணிகள் மேற்கொள்ளப்படுவதை மாவட்ட தேர்தல் அலுவலர் ஆய்வு செய்தார்.

தொடர்ந்து வேட்பு மனு தாக்கல் செய்யும் போது வேட்பாளரையும் சேர்த்து மொத்தம் 5 நபர்கள் மட்டுமே கலந்து கொள்ள வேண்டும். வேட்பு மனு தாக்கலின் போது தேர்தலுக்காக வேட்பாளர்கள் விண்ணப்பத்தை தாக்கல் செய்யும் சமயத்தில், தேர்தல் நடத்தும் அலுவலரது அலுவலகத்திலிருந்து 100 மீட்டருக்குள் 3 வாகனங்கள் மட்டுமே செல்ல அனுமதி வழங்கப் படும்.

வேட்பு மனு தாக்கல் செய்ய வரும்போது கூட்டமாக வருவது தவிர்க்கப்பட வேண்டும். பிரசார வாகனங்களை வேட்புமனு தாக்கல் செய்யும் இடத்தில் பயன்படுத்தக்கூடாது போன்ற தேர்தல் ஆணையம் வழிகாட்டுதல்களை தேர்தல் நடத்தும் அலுவலர்கள் முறையாக பின்பற்றிட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சட்டமன்ற தேர்தலை நியாயமான மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் நடத்திட ஏதுவாக பறக்கும் படைகள், நிலையான கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்பணியில் ஈடுபடும் அலுவலர்கள் வாகன சோதனையின் போது பொதுமக்களுக்கு எவ்வித இடையூறுமின்றி பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப் பட்டுள்ளது.

மேலும் கைப்பற்றப் படும் பணம் மற்றும் பொருட்களை உரிய ஆவணங்களுடன் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கி வரும் குறைதீர்க்கும் குழுவை அணுகி மீளப் பெற்று கொள்ளலாம், என மாவட்ட தேர்தல் அலுவலர் தெரிவித்தார்.

இதில் விருத்தாசலம் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர், கோட்டாட்சியர் விஷ்ணுப்பிரியா, உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் தாசில்தார் பிரகாஷ், நகராட்சி ஆணையர் நாகராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# வந்தவாசியில் பிரச்சாரம் தொடங்கிய அதிமுக வேட்பாளர்..!



வந்தவாசி, மார்ச் 29: திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி தனி சட்டமன்றத் தொகுதியில் அதிமுக வேட்பாளராக அறிவிக்கப்பட்ட ராணி பெருமாள், வந்தவாசி செல்வ விநாயகர் கோவிலில் தேங்காய் உடைத்து வழிபாடு செய்தும், அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தும் தனது தேர்தல் பரப்புரையை தொடங்கினார். உடன் மாவட்ட அம்மா பேரவை செயலாளர் பாஸ்கர் ரெட்டியார், மாவட்ட அவைத் தலைவர் டிகேபி மணி, நகர செயலாளர் ஓட்டல் பாஷா, பாஜக நிர்வாகிகள் முத்துசாமி, சுரேஷ், பாமக வரதன், புரட்சி பாரதம் ஜோசப், அமமுக வழக்கறிஞர் வெங்கடேசன் உள்ளிட்ட தோழமைக் கட்சியினர் பலரும் உடன் பங்கேற்றனர்.

# ஆங்கிலம் கல்வியில் படிக்கும் எல் கே ஜிசிறுமி 50 திருக்குறளை மனப்பாடம் செய்து சாதனை!!!



திருப்பூர்: மார்ச்29 15 வேலம்பாளையம் திருப்பூர் பகுதியில் உள்ள ஆங்கில பள்ளி ஜெய் சாரதா மேல்நிலைபள்ளியில் படித்து வரும் எல்கேஜி படிக்கும் மாணவி 50 திருக்குறள் மற்றும் அனைத்து படிப்புகளிலும் முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்..

பாசில் ராஜா அப்ரின் தம்பதிகளின் மகளான ஆரிஃபா சிறுவயது முதலிலே தனது படிப்பில் மிகவும் ஆர்வம் காட்டி வரும் பள்ளி மாணவி 50 திருக்குறள்களை மனப்பாடம் செய்து.

இன்று நடைபெற்ற 2026ம் ஆண்டு பள்ளி விழாவில் தான் படித்த திருக்குறள்களை அனைத்தையும் மனப்பாடத்தில் ஆசிரியர்கள் பொதுமக்களிடம் ஒப்படைத்தார்.

ஆண்டு விழாவிற்கு வருகைதந்த அனைவரும் மகிழ்ச்சி அடைந்து மாணவியை பாராட்டி மகிழ்ந்தனர்..

**தலைக்கவசம் அணிந்து இருசக்கர வாகனம் ஓட்டுவீர்....**

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421